Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 தை 26 வெள்ளிக்கிழமை (09-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 75

மத்திய வங்கிக் குண்டு வெடிப்பு:

## சிரேஷ்ட பொலீஸ் அதிகாரியும் இராணுவ கப்டன் ஒருவரும் கைது!

கொழும்பு, பெப். 9

மத்திய வங்கி குண்டுத் தாக்குதல் தொடர்பாக இராணுவ கப்டன் ஒருவரும், சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெடிமருந்து நிரப்பப்பட்ட லொறியை வவுனியாவில் இருந்து கொழும்புக்கு வர இந்த இரு அதிகாரிகளும் அனுமதித்தார்கள் என்ற குற்றச்சாட்டுத் தொடர்பாக இவர்கள் மீது விசாரணை நடத்தப்பட விருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதல் நடத்தியவர்கள் கொழும்புக்கு வருவதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட இராணுவ சார்ஜன்ட் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்கொலைப் படையினர் பாதுகாப்பு சோதனை நிலைகளைக் கடந்து கொழும்பு நகருக்கு வர வசதியாக மோசடி பத்திரங்களை தயாரித்ததாக இராணுவ சார்ஜன்ட் சந்தேகிக்கப்படுகின்றார்.

## கொழும்பு பாடசாலைகள் மீண்டும் மூடப்படலாம்!

### 35 அதிபர்கள் அமைச்சருடன் பேச்சு

கொழும்பு, பெப். 9

மத்திய வங்கிக் குண்டுத் தாக்குதலை அடுத்து கொழும்பில் பாடசாலைகள் மீண்டும் மூடப்படலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த செப்ரெம்பரில் கொலன்னாவ, ஊறுகொடவத்த எண்ணெய்க் குதங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து பாடசாலைகள் மீதும் இவ்வாறான தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டது தெரிந்ததே.

அண்மையில் மத்திய வங்கி மீதான தாக்குதலை அடுத்தும் இவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அவதானிகள் கருதுவதாக பி. பி. ஸி தெரிவித்தது.

இதற்கிடையே கொழும்பின் பிரபலமான 35 பாடசாலைகளின் அதிபர்கள் கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரனவைச் சந்தித்து இது குறித்து பிரஸ்தாபித்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா தொடக்கி வைக்கும் நாடாளுமன்ற வைபவம்: ஐ. தே. க. இன்று பகிஷ்கரிப்பு

### பாதுகாப்புக் கெடுபிடிக்கு ஆட்சேபம்

கொழும்பு, பெப்ரவரி 9

ஸ்ரீலங்காவின் பத்தாவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடரை ஜனாதிபதி சந்திரிகா இன்று தொடக்கி வைக்கும் வைபவத்தை —

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற வைபவத்தில் கலந்து கொள்ளும் எம். பிக்கள் மீது பாதுகாப்புக் கெடுபிடிகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை ஆட்சேபித்தே ஐ.தே. கட்சியினர் இன்றைய நிகழ்வுகளைப் பகிஷ்கரிக்கவுள்ளனர்.

கொழும்பு, மத்திய வங்கி மீது கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை அடுத்து நாடாளுமன்றத்தில் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி இதற்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்து இன்றைய நாடாளுமன்ற அமர்வைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமது வாகனங்களில் நேரடியாகச் செல்வதற்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது.

இவர்கள் தமது வாகனத்தை நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கு வெளியே நிறுத்திவிட்டு அரசு ஏற்பாடு செய்யும் வாகனத்திலேயே நாடாளுமன்றம் வரவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகள் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டி உள்ளது.

தனது அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவை நாடும் பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு இந்த பகிஷ்கரிப்பு நல்லதாகத் தெரியவில்லை என்று பி. பி. ஸி. செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பேர்ட்றம் தித்தவெல நேற்று பி. பி. ஸிக்கு கருத்து வெளியிடுகையில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாக தமது வாகனங்களில் வருவதற்கான தடை அகற்றப்பட்டுள்ளதாகவும் —

அத்தடை விருந்தினர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும் தெரிவித்தார். (அ)

## சிம்பாப்பே வார இறுதியில் முடிவு செய்யும்

மெல்போர்ன், பெப். 9

இலங்கையில் நடைபெறும் உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் சிம்பாப்பே அணி பங்குபற்றுமா அல்லது இல்லையா என்பது குறித்து வார இறுதியில் முடிவு செய்யப்பட இருக்கிறது என ஆஸ்திரேலிய வானொலி தெரிவித்தது.

வார இறுதியில் சிம்பாப்பே கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கூடி ஆராயவிருப்பதாகவும்—

ஆஸ்திரேலிய, மேற்குஇந்திய அணிகள் இலங்கையில் நடை

( 4ஆம் பக்கம் பார்க்க)

## கைதடியில் படையினர் நேற்று ஷெல் வீச்சு!

### பெண் ஒருவர் காயமடைந்தார்

மந்திகை, பெப். 9

தோட்ட வெளியில் விழுந்த ஷெல்லினால் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பெண் ஒருவர் காயம் அடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் கைதடியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கைதடியைச் சேர்ந்த கொத்தன் சின்னம்மா (65 வயது) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். (இ-13-15)

## நீர்ப்பாய்ச்சும் இயந்திரம் கல்முனையில் தகர்ப்பு

கொழும்பு, பெப். 9

கல்முனை சவளக்கடை வீதியில் கிட்டங்கிச் சந்தியில் அமைந்துள்ள தேசிய நீர் விநியோக வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான நீர்ப்பாய்ச்சும் இயந்திரம் ஒன்று நேற்று முன்தினம் இரவு 9-30 மணி அளவில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

அமெரிக்க நிறுவனம் ஒன்று 12 லட்சம் ரூபா செலவில் நிர்மாணித்த இந்த இயந்திரம் மூலம் சுமார் 4 ஆயிரத்து 200 ஏக்கர் வயல்களுக்கு நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்பட்டு வந்ததாக இலங்கை வானொலி தெரிவித்தது. (இ 7)

## ரோந்து சென்ற படையினர் மீது மட்டக்களப்பில் புலிகள் தாக்குதல்!

சாவகச்சேரி, பெப். 9

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லம்பா வெளியில்ரோந்து சென்ற படையினர் மீது கடந்த திங்கட்கிழமை மாலை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து மேலதிக தகவல்கள் எதுவும் தெரிய வரவில்லை.

எனினும் இந்தத் தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சித்தாண்டியைச் சேர்ந்த [illegible] குமார் என்ற தமிழர் கொல்லப்பட்டார் என்றும் —

அந்தப் பகுதியிலிருந்த வீடுகள் யாவும் படையினரால் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

குடிதண்ணீரில் விஷம்:

## வெள்ளை வானில் வந்தே வதந்தி பரப்பினராம்

கொழும்பு, பெப். 9

தலைநகர் கொழும்பில் குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிதண்ணீரில் விஷம் கலக்கப்பட்டிருப்பதாக கடந்த செவ்வாய் நள்ளிரவு வதந்தியைப் பரப்பிய நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் எம். டி. திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் சில இடங்களில் வெள்ளை வானில் வந்த சிலரே இத்தகைய வதந்தியைப் பரப்பினர் என்றும்—

ஒரே நேரத்தில் நகரின் பல இடங்களிலும் இந்த வதந்தி பரப்பப்பட்டிருப்பதால் இது ஒரு குழுவின் திட்டமிட்ட செயலே என பொலீஸார் சந்தேகிக்கின்றனர் என்றும்— தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பப்படம் தயாரிப்பதற்கு உகந்த உழுந்து மா விற்பனைக்குண்டு. தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அண்ணா கோப்பிக்கடை, யாழ். வீதி, கிளிநொச்சி. (சி/4014)

$1\frac{1}{2}$ K.V. புதிய ஜெனரேட்டர், றொபின் வாட்டர்பம்ப், நன்னீர் தேவைக்கு பாவிக்கும் 200 லீற்றர் கல்வனைஸ்ட் கொள்கலன் விற்பனைக்கு உண்டு. மங்களபதி வைத்திய சாலை, (சண்முகானந்த வித்தியாசாலைக்கு அருகில்) நுணாவில் - கல்வயல் வீதி, கல்வயல், சாவகச்சேரி. (40600)

1996ஆம் ஆண்டுக்கான சகல விதமான டயறிகளும் விற்பனையாகின்றன. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 08, மேல்மாடி (உட்புறம்), சாவகச்சேரி. (சி-2967)

### உடன் தேவை

சக்கர நாற்காலி [Wheel Chair] விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் தொடர்பு கொள்ளவும். 53, C/o உதயன், சரசாலை. (40617)

### திருமண சேவை

கே. கே. எஸ். றோட், மல்லாகம், வளர்மதி இல்லத்தில் இயங்கி வந்த துர்க்கா திருமண சேவை தற்பொழுது இல. 15, கந்தஉடையார் லேன், பருத்தித்துறையில் இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம். (40119)

### சோதிடம்

ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞான ரீதியில் உங்களின் வாழ்க்கையை அறிந்திட நாடுங்கள்: த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி (அரசினர் வைத்தியசாலை எதிரில்). (40625)

### போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ், வீவா (பிளாஸ்டிக் மூடியுடன்), பியர், நெல்லிக்கிறஷ், ஜாம், கோடியல் போத்தல்களை பருத்தித்துறையில் உள்ள வேலவன் ஸ்ரோர்ஸ், ரதி ஸ்ரோர்ஸ், தீன்சுவை, செல்வராஜா ஸ்ரோர்ஸ், குட்டி ஸ்ரோஸ் மற்றும் மந்திகையில் உள்ள தேன்சோலையில் ஒப்படைத்துப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ்லைன் இன்டஸ்றீன் (தனி) வரை. [சி-4004]

### கணனி வகுப்புக்கள்

பிரத்தியேக கணனி வகுப்புக்கள் ஆரம்பம்: 10-2-96 / 14-2-96— 9-00a.m. (Basic, Pascal, Ctt, d BASE, III + Lotus) தொடர்புகளுக்கு: K. Vignesh Talent Institute, கோவில் சந்தை, கரவெட்டி, நெல்லியடி. (40124)

## உற்சவம்

வடபகுதியிலுள்ள கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான தும்பளை லூர்து அன்னை தேவாலய வருடாந்த உற்சவம் கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நாளை 10ஆம் திகதி இரவு முழுவதும் நடைபெறும் ஆராதனைகளைத் தொடர்ந்து 11ஆம் திகதி காலை கூட்டுத் திருப்பலி, திருச்செருப பவனியுடன் உற்சவம் நிறைவுறும்.

---

## தேடுகின்றார்

ஈஸ்வரி இரும்பகம்,
சுன்னாகத்தில் முன்னர் கடமையாற்றிய
செ. இராஜேந்திரம் சிவலிங்கம்
என்பவரை கடை உரிமையாளர் சி. பொன்னுத்துரை தேடுகிறார். எங்கிருந்தாலும் உடன் வந்து சந்திக்கவும்.

முகவரி: சி. பொன்னுத்துரை,
மே/பா, வே. செல்லத்துரை,
இல. 585, 6ஆம் யூனிற்,
இராமநாதபுரம், வட்டக்கச்சி. (40461)

---

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள புதிய மாருதி எஞ்சின்
10. H. P. விற்பனைக்கு உண்டு
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**சுவையருவி**
பேருந்து நிலையம், நெல்லியடி.
(49598)

---

## தேவை

★ தேநீர் தயாரிப்பவர் (Tea Maker)
அனுபவம் உள்ளவர்கள் கீழ் குறிப்பிடப்படும் முகவரியில் நேரில் சந்திக்கவும்.

**சுவையருவி**
பேருந்து நிலையம், நெல்லியடி.
(40599)

---

சாவகச்சேரியில் வெகு விரைவில்
## சாயிராம் கிளினிக்

நோயாளரின் வசதி கருதி சாவகச்சேரி வைத்திய சலை அருகே அமைந்துள்ளது.


★ யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களின் வைத்திய சேவையையும் ஆலோசனையையும் பெற்றுக்கொள்ளலாம்.

(40705) நிர்வாக இயக்குனர்.

---

## லாவண்யா

### பல் மூக்குக் கண்ணாடி அகம்



உங்கள் கண்களை நவீன முறையில் பரிசோதித்து உடன் கண்ணாடி பெறவும். பற்களை சிறந்த முறையில் ஒரே நாளில் கட்டிக் கொள்ளவும் வடதமிழீழத்தில் உள்ள ஒரே ஸ்தாபனம் ''லாவண்யா''

உரிமையாளர் :-
டாக்டர் றெஜி சொலமன்

கண்டி வீதி,
சாவகச்கேரி.
(A. G. A. காரியாலயம் முன்பாக)

கிளை :-
யாழ். வீதி,
நெல்லியடி.
(மகாத்மா தியேட்டர் அருகில்)

[சி/4019]

---

ஓய்வு பெறும் எமது முன்னை நாள்
## அதிபருக்கு வாழ்த்துக்கள்
### திரு. நா. க. சண்முகநாதபிள்ளை

அவர்கள் நயினை மண் ஈன்றெடுத்த தவப்புதல்வர்களில் ஒருவர். அவர் நயினை மகா வித்தியாலயத்தில் அதிபராகவிருந்த காலத்தில் மாணவர்கட்டு ஏட்டுக் கல்வியை மட்டுமின்றி அவர்களுடைய சுய அறிவையும், சமய நம்பிக்கைகளையும் வளர்த்தார். பாடசாலையிலேயே தங்கி அதனை ஒரு கலைக் கோயிலாகவும் மாற்றினார். இவர் காலத்தில் பல்கலைக் கழகம் தெரிவானோர் ஏராளம் பேர். அங்கிருந்து யாழ்ப்பாணம் மாற்றலாகி வந்து மத்திய கல்லூரியின் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் பாதுகாப்புக் காரணங்களால் மீண்டும் நயினை செல்ல முடியாதிருந்த போது நயினை இளைஞர்களுடன் இணைந்து நயினை நாகபூசணி அம்மன் தேர்த்திருவிழா சிறப்பு மலர் வெளியிட உதவினார். இதனை விட அவர் செய்த, செய்கின்ற அறப்பணிகள், நாட்டுப் பணிகள் எழுத்தில் அடங்கா. அவர் நீடூழி காலம் வாழ்ந்து தமது பணிகளைத் தொடர்ந்து செய்ய அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

பழைய மாணவர்
யா/நயினாதீவு மகா வித்தியாலயம்
நயினாதீவு.
(407C3)

---

வீடு, காணி
## விற்பனைக்கு

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கிக்குப் பின்புறம் 2ஆம் குறுக்குத் தெருவில் $1\frac{1}{4}$ பரப்பு வீடு வளவும், தும்பளை லட்சுமணன் தோட்டத்தில் $2\frac{1}{2}$ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**கு. பஞ்சரட்ணம்**
மே/ பா. மு. நாகலிங்கம்,
மொழி பெயர்ப்பாளர்,
சிவன் கிழக்கு ஒழுங்கை,
தும்பளை வீதி. (40125)

---

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

சகல பொதுச்சபைப் பிரதிநிதிகளுக்கும்,

தற்பொழுது இடம்பெயர்ந்து வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் வசிக்கும் எமது சங்க பொதுச் சபை பிரதிநிதிகள் தங்கள் முகவரியை சாவகச்சேரி, நவீன சந்தை மேல் மாடியில் இயங்கும் எமது தலைமைக் காரியாலயத்திற்கு அறியத் தரும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

செயலாளர்.

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
நவீன சந்தை மேல் மாடி,
சாவகச்சேரி. (40631)

---

வயாவிளான்
### மத்திய மகாவித்தியாலயம்
## பொன்விழா நிகழ்வு II

இடம்: பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

காலம்: 11 - 02 - 1996 ஞாயிறு காலை 11 மணி

சிறப்புரை: திரு. சிவ. மகாலிங்கம் அவர்கள்
விரிவுரையாளர் பலாலி அரசினர் ஆசிரிய கலாசாலை

பெற்றோர், பழையமாணவர், நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

குறிப்பு: காலை 9-30 மணிக்கு வல்லிபுர ஸ்ரீவிஷ்ணு ஆலய தரிசனம் நடைபெறும்.

(40629)

---

வருடாந்தப்
## பொதுச்சபைக் கூட்டம்

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் கூட்டமும், நடப்பு வருடத்துக்கான (1996) புதிய நிர்வாகத் தெரிவும் 11 - 02 - 96 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர், சாரதிகள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இவ்வண்ணம்,
தலைவர்
மு. ச. மோ. ஊ. சே. சங்கம்.
சாவகச்சேரி.

(40628)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: **25 — 12 — 1950**   மறைவு: **11 — 01 — 1996**

### கமலமணி விக்னேஸ்வரன்

எங்கள் அன்புக்குரியவளான கமலமணியின் மரணச் சடங்குகளில் பங்கேற்ற உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், இல்லத்துக்கு வருகை தந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாளை சனிக்கிழமை 10 – 02 – 1996 காலை அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறவுள்ளன. உறவினர்களும், நண்பர்களும் இதில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

ப. விக்னேஸ்வரன் (கணவர்), வி. சர்மினி (மகள்),
மனோன்மணி சண்முகதாஸ் (அக்கா),
மு. தயாபரன் (தம்பி).

நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை. (40558)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இரண்டாவது தோல்வி!

சந்திரிகா அரசுக்கு, குறிப்பாக பெயருக்குத் தமிழரான அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு, இரண்டாவது தடவையாக படுதோல்வி கிடைத்திருக்கிறது!

வெளிநாடுகளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி கிடைப்பதையும், அவர்கள் பிறநாடுகளில் அலுவலகங்கள் வைத்து இயங்குவதையும் நிறுத்துவிப்பதற்கு — தடைசெய்விப்பதற்கு — ஸ்ரீலங்கா அரசாங்கம் எடுத்த முயற்சியே மீண்டும் தோல்வி அடைந்துள்ளது.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிந்து, சமாதானப் பேச்சுக்கள் குழம்பிய கையோடு சந்திரிகா தமது முதலாவது முயற்சியில் ஈடுபட்டார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை விடுதலைப் புலிகளே முறித்துக் கொண்டார்கள் என்று தீவிர பொய்ப் பிரசாரம் செய்து, வெளி உலகத்தை நம்ப வைத்தார். அதனைத் தக்க தருணமாகக் கருதி அமைச்சர் கதிர்காமரை வெளிநாடுகளுக்கு அனுப்பினார்.

அமைச்சர் கதிர்காமர் தமது வாதத் திறமையைப் பயன்படுத்தி வெளிநாடுகளை தம்வசமாக்க முயலு மட்டும் முயன்றார்.

விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாகக் காட்டினார். அவர்களுக்கு வெளிநாட்டுப் பணம் கிடைப்பதால் தான் இலங்கையில் போர் தொடர்கிறது என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யுமாறு மேற்குலக நாடுகளிடம் கைகட்டி, சிரந்தாழ்த்தி, முழங்காலிட்டு, பாதத்தைத் தொட்டு கெஞ்சி மன்றாடினார்.

எமது நாட்டுச் சட்ட திட்டங்களை விடுதலைப் புலிகள் மீறாத வரையில் அவர்களைத் தடைசெய்ய முடியாது. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது. உங்கள் நாட்டிலேயே விடுதலைப் புலிகளைத் தடை செய்யாமல், எங்களை எப்படிக் கேட்க முடியும் — என்று கூறி, கதிர்காமரின் ''முகத்தில் அறைந்து'' திருப்பி அனுப்பினார்கள்!

எனினும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வெளிநாடுகளின் மனதை மாற்றும் பிரசார முயற்சிகளை சந்திரிகா அரசு தொடரவே செய்தது.

மத்திய வங்கிக் குண்டு வெடிப்பைக் கண்டித்து சில வெளிநாடுகள் அறிக்கைகள் வெளியிட்டன அல்லவா? அதனை தக்க தருணம் எனக் கதிர்காமர் கருதினார். காற்றுத் தமது பக்கம் வீசுவதாக நினைத்துத் தூற்றிட நினைத்தார். கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து தமது பழைய கோரிக்கையை முன் வைத்தார்.

வெளிநாடுகளின் ''அனுதாப அலை''யைப் பற்றிக் கொண்டு தான் இலக்கிட்ட கரையை அடைய நினைத்தார். மீண்டும் தடுக்கிவீழ்ந்து விட்டார், பாவம்! இரண்டாவது தடவையாக மூக்குடைபட்டிருக்கிறார்!

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தன்னைப்போன்ற சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிமைகள் அல்லர்; விடுதலை வேட்கையும் இனப்பற்றும் உள்ள மறத் தமிழர்கள் என்பதனை கதிர்காமர் உணர்வது எப்போது? சந்திரிகாவுக்கு அதனைச் சொல்வது எப்போது?

---

யாழ்ப்பாணத்தில் இருந்து

# இராணுவம் வெளியேறினாலேயே போர் நிறுத்தம், பேச்சு சாத்தியம்

## ஆஸி, துணை தூதரிடம் பேராயர் ஜெபநேசன் தெரிவிப்பு

சாவகச்சேரி, பெப். 9

யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவம் வெளியேறினால் மட்டுமே போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் என்பன சாத்தியமாகும்.

தென் இந்திய திருச்சபை யாழ். பேராயர் அதி. வண. ஜெபநேசன் கொழும்பில் உள்ள ஆஸ்திரேலிய துணை தூதுவர் லொறைன் எம் பாக்கரிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பு சென்றிருந்த பேராயரை ஆஸ்திரேலிய துணைத் தூதுவர் தமது அலுவலகத்துக்கு அழைத்து வடக்கு நிலைமை குறித்து கேட்டபோதே பேராயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் இடம் பெயர்ந்துள்ள மக்கள் படும் கஷ்டங்கள் குறித்து ஆர்வத்துடன் ஆஸ்திரேலிய துணைத் தூதர் கேட்டறிந்ததாக அவர் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு கண்டு சமாதானச் சூழ்நிலை ஏற்படவேண்டுமானால்—

போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை ஏற்படவேண்டுமானால் — யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவம் வெளியேறவேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடாகவிருக்கிறது! என்றும் ஆஸ்திரேலிய துணைத் தூதுவரிடம் அவர் வலியுத்திக் கூறினார்.

(இ-3)

## ஓய்வூதிய கொடுப்பனவு தாமதம் விரைவில் நீங்கு

சாவகச்சேரி, பெப். 9

யாழ். மாவட்ட ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியக் கொடுப்பனவுகளை குறிப்பிட்ட காலத்தில் பெறுவதில் இருந்து வந்த சிக்கல் நிலைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரச அதிபர் ஓய்வூதியப் பணிப்பாளருடன் இது தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தி இருந்தார்

ஓய்வூதியர்களின் கொடுப்பனவுகள் தொடர்பாக அப்போது எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

★ வலிகாமத்தில் உள்ள 400 ஓய்வூதியர்களுக்கும், கொழும்பில் உள்ள ஆயிரத்து 400 ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதியப் பணிப்பாளர் கொடுப்பனவுகளை வழங்குவார்.

★ வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த ஓய்வூதியர்களுக்கு யாழ் அரச அதிபர் கொடுப்பனவுகளை வழங்குவார்.

★ வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதியில் நிரந்தரமாக தங்கியுள்ள சுமார் ஆயிரத்து 500 ஓய்வூதியருக்கு அந்த அந்த மாவட்ட அரச அதிபர்கள் கொடுப்பனவுகளை வழங்குவர். இதற்கான நிதியை ஒரு மாதங்களுக்கு யாழ். அரச அதிபர் வழங்குவார் பின்னர் இதற்குத் தேவையான நிதியை ஓய்வூதியப் பணிப்பாளர் நேரடியாக அந்த அந்த மாவட்ட அரச அதிபர்களுக்கு வழங்குவார்.

★ வன்னி மாவட்டத்திலும், யாழ். மாவட்டத்திலும் நிரந்தரமாக தங்காத யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 ஓய்வூதியரின் கொடுப்பனவு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. (இ 3)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996-02-09 இரவு

- ★ 8-00 — ஆரம்பம்
- ★ 8.02 — கலை மஞ்சரி
- ★ 8.20 — அரசியல் அரங்கம்
- ★ 8.30 — செய்திகள்.
- ★ 8.40 — அறிவிப்புகள் — தொடர்ந்து 9.00 மணி வரை தாயகப்பாடல்கள்.

1996-02-10 காலை

- ★ 7.00 — ஆரம்பம்
- ★ 7.02 — மாவீரர் வணக்கம்
- ★ 7.10 — எழுச்சி கீதங்கள்
- ★ 7.30 — செய்திகள்
- ★ 7.35 பத்திரிகைச் செய்திகள்
- ★ 7.45 — அறிவிப்புகள் தொடர்ந்து 8.00 மணி வரை தாயகப் பாடல்கள்.

## கிளிநொச்சியில் சிவன் ஆலய குடமுழுக்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் பழைமை வாய்ந்ததும் ஒரே ஒரு சிவாலயமுமான உருத்திரபுரீச்சரம் சிவன் ஆலய குடமுழுக்கு பெருவிழா இன்று காலை நடைபெறவிருக்கிறது.

நேற்றுக்காலை ஆரம்பமான குடமுழுக்கு கிரியைகளையடுத்து ஏராளமானவர்கள் எண்ணெய் காப்பு சாத்தினார்கள்.

இன்று காலை 5 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 8-50 க்கும் 11 மணிக்கும் இடையில் குடமுழுக்கு நடைபெறும்.

இவ்விழாவில் மாலை திருக்கல்யாண வைபவமும், திருவூஞ்சல் திருவீதிஉலா ஆகியனவும் இடம்பெறும்.

இன்றைய விழாவில் கலந்து கொள்ளும் பக்தர்களின் நலன் கருதி தமிழீழ போக்குவரத்துக் கழகம் விசேட போக்குவரத்து சேவையை ஏற்பாடு செய்துள்ளது.

இன்றைய குடமுழுக்கு விழாவைத் தொடர்ந்து 45 நாள்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும் என்று பரிபாலனசபைத் தலைவரும், கிளிநொச்சி செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளருமான திரு. தி. இராசநாயகம் தெரிவித்தார். (இ-3)

## நெல் கொள்வனவு

நெல் உற்பத்தி செய்த விவசாயிகளின் நலன் கருதி இன்று 9 ஆம் திகதி முதல் யாழ். சாலை மீசாலையில் அமைந்துள்ள சோழன் அரிசி ஆலையிலும், நெல்லியடி, திருமகள் வீதியில் அமைந்துள்ள சோழன் அரிசி ஆலையிலும் நெல் கொள்வனவு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அரச அதிகாரிகள், ஊழியர்கள் வன்னி சென்று பணியாற்றுவர்

### அங்கு நிலவும் பற்றாக் குறையை நீக்க நடவடிக்கை

சாவகச்சேரி, பெப். 9

யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் நிர்வாக சேவை அதிகாரிகள், கணக்காளர்கள், எழுதுநர்கள் பலர் வன்னி மாவட்டத்தில் பணியாற்ற விரும்புகிறார்கள்.

வலிகாமத்தில் இருந்துஇடம் பெயர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்குசென்றுள்ள மக்களுக்கு பணியாற்ற போதிய அதிகாரிகள் இல்லாதகாரணத்தால் வேலைகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்தே தற்போது யாழ். செயலகம், வலய அலுவலகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் நிர்வாக சேவை அதிகாரிகள், கணக்காளர்கள், எழுதுநர்கள் வன்னிக்கு சென்று பணியாற்றவிருக்கின்றனர்.

வன்னியில் உள்ள அலுவலகங்களுக்கு செல்பவர்களுக்கு அந்த அலுவலகங்களில்நிரந்தரமாக பணியாற்ற பொது நிர்வாக அமைச்சு மற்றும் மாகாண அமைச்சு ஆகியன வசதி செய்து கொடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது

## வினைத்திறமை காண் தடை பரீட்சை கொழும்பில்

### 12 ஆம் திகதி நடைபெறும்

கிளிநொச்சி, பெப். 9

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை, கடல் கடந்த சேவை மற்றும் வைத்திய சேவை தவிர்ந்த ஏனைய அரச சேவைகளுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சை - 95 எதிர் வரும் 12 ஆம் திகதி முதல் கொழும்பில் மட்டும் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் கிளிநொச்சி அரச அதிபருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்பரீட்சை 19ஆம் திகதி வரை நடைபெறும்.

12ஆம் திகதி — 04, 18 ஏ, 17ஏ, 64 எண் பாடங்களும்—

13ஆம் திகதி — 5, 16, 62, 63 எண் பாடங்களும் —

14ஆம் திகதி — 1, 118, 6, 17 எண் பாடங்களும்—

15ஆம் திகதி — 1 ஏ, 116, 20, 9,18 எண் பாடங்களும்—

16ஆம் திகதி — 1 பி, 117, 8, 19 எண் பாடங்களும் —

18ஆம் திகதி — 2, 3, 2 ஏ எண் பாடங்களும்—

19ஆம் திகதி—7, 29, 19ஏ, 10, 16 ஏ எண் பாடங்களும் — நடைபெறும்.

(இ-3)

# அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தமிழ்கட்சிகளுடன் ஐ.தே.க. பேசும்

கொழும்பு, பெப். 9

அரசின் அதிகாரப் பரவலாக்கல் சட்ட ஆவணம் சம்பந்தமாக தமிழ் கட்சிகளுடன் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஐ. தே. க. முன்வந்துள்ளது.

ஐ. தே. கட்சியின் தேசிய ஒற்றுமைப்பாட்டு உப குழு இது தொடர்பாக தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு அனுப்பி உள்ளது.

அதில் தமிழ் கட்சிகளுடன் ஆராயப்படவேண்டிய ஐந்து அம்சங்கள் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★ இனவாதம், பிரிவினை இரண்டும் இல்லாமல் நாட்டை வழிநடத்துவது.

★ இலங்கையை பல்லின, பல்மத, பல்கலாசாரம் உள்ள நாடாக அடையாளம் காட்டுவது.

★ மதம், கலாசாரம். அடிப்படை மனித உரிமை, அகதிகள் புனர்வாழ்வு, புனரமைப்பு, கல்வி ஆகியவற்றில் உரிமைகளை பேணுதல்.

★ இலங்கையில் உள்ள இந்திய தொழிலாளரின் பிரச்சினைகளை ஆராய்தல்.

★ வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினையை தேசியப் பிரச்சினையாக இனம் காணுதல்.

இந்த ஐந்து அம்சங்களையும் உள்ளடக்கியே ஐ. தே. கட்சி தமிழ்க் கட்சிகளுடன் பேசவுள்ளது.

இதனிடையே முஸ்லிம் காங்கிரஸின் உயர் மட்டக்குழு ஒன்று அமைச்சர் அஷ்ரப் தலைமையில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த சனியன்று சந்தித்து அவருடன் பேச்சுவார்த்தை நடத்தியது.

அதிகாரப் பகிர்வில் முஸ்லிம்களுக்கான சுயாட்சி அதிகார அலகொன்று அமைப்பதற்கு ஐ. தே. க. ஆதரவு வழங்கவேண்டும் என்று அப்போது முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டுக் கொண்டது.

முஸ்லிம் காங்கிரஸுடனான சந்திப்பின் பின்னரே, தமிழ் கட்சிகளுடன் பேசவேண்டும் என ஐ. தே. க. உயர்மட்டம் தீர்மானித்தது.

(இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் பரவலாக்கல் குறித்து ரணிலுடன் சந்திரிகா பேசுவார்

## ஐ. தே. கவை இணங்க வைக்க முயற்சி

கொழும்பு, பெப். 9

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் குறித்து ஜனதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் பேச்சுக்களை நடத்த உள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி விடுத்த அழைப்பை ரணில் ஏற்றுக் கொண்டுள்ளார் என நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் இம்மாத இறுதிக்குள் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும்—

சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி பொதுவான இணக்கத்துடன் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதே அரசின் நோக்கம் என்றும் — அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்திரா காங்கிரஸுடன் ஜெயலலிதா கட்சி கூட்டு?

சென்னை, பெப். 9

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸுடன் தேர்தல் கூட்டு ஏற்படுத்தும் சாத்தியம் பெரிதும் உண்டு என்று அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்திரா காங்கிரஸுடன் முன்னர் செய்திருந்த தேர்தல் கூட்டை மீள்விப்பதில்லை என்று கூறமுடியாது — என அ. இ. அ. தி. மு. கட்சியின் பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் திருச்சியில் வைத்துச் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

அ. இ. அ. தி. மு. கவின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் திருச்சியில் ஆரம்பமானது.

தேர்தலில் அ. இ. அ. தி. மு. க தனித்தே போட்டியிடும் என்ற நிலைப்பாட்டை நீங்கள் கைவிடமாட்டீர்களா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு —

அரசியலில் எதுவுமே நிரந்தரமானது அல்ல. நிலைமை மாறிக்கொண்டே செல்லும்— என்று செல்வி ஜெயலலிதா பதிலளித்தார்.

# 5ஆம் ஆண்டுப் பரீட்சை ஒகஸ்ட்டிலேயே நடக்கும்

கொழும்பு, பெப். 9

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை இவ்வாண்டு முதல் மீண்டும் ஒகஸ்ட்மாதத்தில் நடத்தப்படும்.

கடந்த வருடம் இப்பரீட்சை டிசம்பர் மாதத்தில் நடத்தப்பட்டது தெரிந்ததே.

கேள்வித்தாள் மாற்றம் காரணமாக மாணவர்கள் தம்மை பரீட்சைக்கு தயார் செய்வதற்கு வசதியாக அவ்வாறு டிசம்பரில் பரீட்சை நடத்தப்பட்டது.

டிசம்பர் மாதத்தில் பரீட்சை நடத்தப்பட்டதால் மாணவர்கள் புதிய பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்கினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்தே இனி முன்னைரப் போன்று ஒகஸ்ட் மாதம் பரீட்சையை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-3)


## METHODIST CHURCH SRILANKA

The President of the Methodist Conference Rev. Duleep R. Fernando will induct Rev. S. S. Karunairaj as the Chairman of North and East District Synod, on Saturday the February 10th at 4. 30 p. m. at Methodist Church Pointpedro.

Your presence and prayers will be appreciated.

If there is any change in the programme, it will be announced in Saturday's Uthayan.

METHODIST CHURCH,
PointPedro — Jaffna Circuit.

(C/4021)



## மெதடிஸ்த திருச்சபை தலைவரின் வருகை

வடக்கு — கிழக்கு மறைமாவட்டத் தலைவர் அருட்திரு. எஸ். எஸ். கருணைராஜ் அவர்களின் நியமன ஆராதனையை இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவர் அதிவணக்கத்துக்குரிய டுலீப். ஆர். பெர்னாண்டோ அவர்கள் நாளை 10 - 02 - 1996 பி. ப. 4.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த தேவாலயத்தில் நடத்தி வைப்பார்.

இலங்கை மெதடிதஸ்த திருச்சபையின் தலைவர் பங்கு பற்றும் மற்றும் நிகழ்வுகள் வருமாறு:-

★ 11 - 02 - 1996 ஞாயிறு காலை 8.00 மணிக்கு பூரண அங்கத்தவர்களாக ஏற்கும் ஆராதனை.

இடம்: பருத்தித்துறை மெதடிஸ்த ஆலயம்

★ 11 - 02 - 1996 ஞாயிறு பி. ப. 4.00 மணிக்கு — திருமுழுக்கு ஆராதனை.

இடம்: நேசகம்

மெதடிஸ்த திருச்சபை
பருத்தித்துறை — யாழ். சேகரம்

(சி/4020)


## உசனில் ஸ்கந்த ஹோமம்

மக்களின் நலன் வேண்டியும் தமிழீழ விடுதலைப் போராட்ட விடிவுக்காக ஆசி வேண்டியும் உசன் கந்தசுவாமி கோவிலில் இன்று ஸ்கந்தஹோமம் நடைபெறுகிறது.

சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சி இன்று காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகிறது. பிற்பகல் 4 மணிக்கு சண்முகார்ச்சனை இடபெறும். (அ)

## ஐவர் முற்றாக பார்வை இழந்தனர்

மத்திய வங்கிக் குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்டு கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட 75 பேரில் ஐவர் முற்றாகப் பார்வையிழந்துள்ளனர் எனவும்—

பத்துப் பேர் ஒரு கண் பார்வையை இழந்துள்ளனர் எனவும்—

கண் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோரில் பெரும்பாலோருக்கு கண்ணாடிச் சிதறல்களாலேயே காயமேற்பட்டுள்ளது எனவும்— கொழும்பு கண் ஆஸ்பத்திரி தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பருத்தித்துறை வல்வை சிற்றூர்திச் சேவை

நாளை சனிக்கிழமை முதல் பருத்தித்துறையில் இருந்து வல்வெட்டித்துறைக்கான குறுகிய தூர சிற்றூர்திச் சேவை ஆரம்பிக்கப்பட உள்ளதாக சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

வல்வெட்டித்துறையில் இருந்து காலை 10-30 மணி பிற்பகல் 3-15 மணி ஆகிய நேரங்களிலும்—

பருத்தித்துறையில் இருந்து காலை 9-15 மணி பிற்பகல் 4-30 ஆகிய நேரங்களிலும்— சிற்றூர்திகள் புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ[

## செஞ்சிலுவை பிரதிநிதி வருகிறார்

சாவகச்சேரி, பெப். 9

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஜெனிவா அலுவலகத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான சுகாதார பிரதிநிதி டாக்டர் திருமதி. மிச்சில்வி ஜேன்மாரி நாளை 10ஆம் திகதி வரவிருக்கிறாா.

நாளை சனிக்கிழமை பருத்தித்துறைக்கு வரவிருக்கும் 'ஹபரண' கப்பலில் வரும் இவர் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்கு சென்று அங்குள்ள சுகாதார நிலை குறித்து ஆராய்வார்.

யாழ். போதனா வைத்திய சாலை உட்பட ஏனைய வைத்திய சாலைகளுக்கும் அவர் விஜயம் செய்வார். (இ-3)

### சிம்பாப்பே...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெறும்போட்டிகளில் பங்குபற்றுவதில்லை என்ற முடிவில் உறுதியாக இருப்பதாகவும்— அச்செய்தி மேலும் தெரிவித்தது. (இ-3)

# தள்ளாடி ராணுவ முகாமில் மூன்று சிப்பாய்கள் பலி!

## சக சிப்பாய் ஒருவர் சுட்டார்!!

கொழும்பு, பெப். 9

மன்னாரிலுள்ள தள்ளாடி இராணுவ முகாமில் சிப்பாய் ஒருவர் சக சிப்பாய்கள் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

இச் சம்பவம் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது.

இறந்தவர்களில் ஒருவர் கோப்ரல் தரத்தைச் சேர்ந்தவர் எனவும்—

இக்கொலைகளுக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை எனவும் திவயின பத்திரிகை தெரிவிக்கிறது.

## 3 பொலீஸார் படுகாயம்

மட்டக்களப்பு மாவட்டம் கல்குடாவில் கடந்த திங்கட்கிழமை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 3 பொலீஸார்படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவர் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை நடைபெறும் வேளைகளில் அவற்றின் பாதுகாப்புக்கருதி அவை அமைந்துள்ள வீதிகளை மூடிவிடும்படி அவர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

பாடசாலையின் பாதுகாப்புப் பிரச்சினையை ஏற்றுக் கொண்ட அமைச்சர், வீதிகளை மூடுவது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சே மேற்கொள்ள வேண்டும் என்றும்— இது குறித்து பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவதாகவும் உறுதி அளித்தார் என்று பி.பி.ஸி மேலும் தெரிவித்தது. (இ-7)


# மரண அறிவித்தல்கள்

திருமதி

## சிசிலியா இரட்ணம்மா நீக்கலஸ்

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்பொழுது மிருசுவிலில் வசித்தவருமான திருமதி சிசிலியா இரட்ணம்மா நீக்கலஸ் நேற்று (8- 2- 96) இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்ற நீக்கலஸ் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி அரியமலர் அந்தோனிப்பிள்ளை, திரு. N. C. இராஜநாயகம் (ஓய்வு பெற்ற தொழில் திணைக்கள ஆணையாளர் — அவுஸ்திரேலியா) திரு. N. J. ஜெயராஜா (சுங்கஇலாகா கொழும்பு), திருமதி இராசமலர் பேடினன் ஆகியோரின் அருமைத் தாயாரும், —

காலஞ்சென்ற திரு. J. அந்தோனிப்பிள்ளை, திருமதி றீற்றா இராஜநாயகம், திருமதி வில்லிமலர் ஜெயராஜா, திரு. J. A. N. பேடினன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ராஜகுமார் றாஜினி, டொமினிக், ரவீந்திரகுமார், றீனி பரராசசேகரன், றஞ்சிற்குமார், றஜிற்றா, தேவா, பிபா, றெமிஜா, அனுஜா, ஷகிலா ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 10 - 2 - 96 சனிக்கிழமை காலை 9 மணிக்கு புனித நீக்கலார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினா, நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:

திருமதி அரியமலர் அந்தோனிப்பிள்ளை (மகள்)

ராஜஸ்தான்,
மிருசுவில்.

(40709)

## திருமதி பாக்கியலஷ்மி ஆறுமுகம்

கொக்குவில் மேற்கு குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதியைச் சேர்ந்த திருமதி பாக்கியலஷ்மி ஆறுமுகம் வியாழக்கிழமை காலமானார்.

இவர் திரு. வி. ஆறுமுகம் (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்- உணவு இலாகா) அவர்களின் அன்புமனைவியும், திருமதி ஜெ. மல்லிகாதேவி, திருமதி ம. லங்காதேவி, திருமதி ஸ்ரீ வசந்தாதேவி திரு. ஆ. இராமச்சந்திரன் (ஆசிரியர்) திரு. ஆ. ரங்கராஜன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு. ஜெயரட்ணம் [தபால் அதிபர், நீர்கொழும்பு அஞ்சலகம்], திரு. ஸ்ரீபாலன் (கனடா), திரு. மகேஸ்வரன், திருமதி இ. கோணேஸ்வரி (ஆசிரியை), திருமதி ர. ஜெயந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயகாந்தன், ஜெயதர்சனன், ஜெயாழினி, சுதாகர், சகிதா, சுவாங்கி, கேதுஷா, சகானா, சாதனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு புலோலி பல்லப்பை, கந்தமுருகேசனார் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனை விழுந்தான் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திரு. வி. ஆறுமுகம் [கணவன்]
ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

கந்தமுருகேசனார் வீதி,
பல்லப்பை, புலோலி.

(40708)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 09-02-96 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org